முருகப்பெருமான் துணை

**மகான் சாக்கிய நாயனார் அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**18.10.2023**, புதன்கிழமை

1. அன்னதான சக்திமிகு அரங்கா
அவதார ஞான தேசிகா
மண்ணுலகில் உன் பெருமை கூறி
மார்க்கமுடன் அறிவுரை ஆசி
2. ஆசிதனை சோபகிருது துலைதிங்கள்
அறிவிக்க முதல்திகதி புந்திவாரம்
(சோபகிருது வருடம் ஐப்பசி மாதம் முதல் நாள், 18.10.2023, புதன்கிழமை)
ஆசிதனை சாக்கிய நாயனாரும்
அருளுவேன் உலக நலம் பெற
3. நலம்தரும் ஞான தேசிகனை
நாட்டிடுவேன் கலியுக மக்கள்
வலம் வந்து முருகா அரங்கா என
வணங்கி தீட்சை ஆசிபெற
4. ஆசிபெற வினைகள் விலகும்
ஆக்கமுடன் அரங்கன் தருமத்தை
நேசமுடன் மக்களெல்லாம் ஏற்று
நிலமதனில் கிளைகளை உருவாக்கி
5. உருவாக்கி தருமம் வளர்க்க
உயர்வான ஞான வழிகளை
திருவருளாக வேண்டி பூஜித்து
தொடர்ந்து பின்பற்றி வருக
6. வருகவே அனைவருக்கும் ஞானபலம்
வல்லமைபட தரும வடிவாக
முருகப் பெருமானின் வழிபாடு பூசை
முழுமை கிட்டும் வண்ணம் செய்து

7. செய்துமே சரவண சோதி ஏற்றி
செகமெல்லாம் ஒளி பரவிட
மெய்ஞானம் எங்கும் பெருகி
மேலவர்களாக மக்கள் மாறுவர்

8. மாறுமே கலியுகம் எங்கிலும்
மகான் அரங்கன் ஆசிபட
ஆறுமுகனாரின் ஆசி அனுகூலம்
அளவிலாப் பெற்று இனிதே

9. இனிதே உலகமக்கள் அனைவரும்
இயம்பிடுவேன் மகான்களாவர்
கனிவேலவன் உலகெலாம் வெளிப்பட
கட்டாயம் உலக மாற்றமதும்

10. மாற்றமதும் அரங்கன் அவதார
மண்ணுலகில் நோக்கமாகநிறை வேறும்
ஆற்றல்பட உலகம் தானும் அரங்கன்
அதிவேக சேவைதனை பின்பற்றி

11. பின்பற்றி வணங்கித் தொடர
பின்பற்றிட எல்லா மாற்றமும்
இன்பமாக மாறி இனிதே உலகம்
இயம்பிடுவேன் ஞான ஆட்சிபெறும்
அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—